உ

ஸ்ரீ கணேசாயநம:

40

# சித்திவிநாயகர் திருப்பதிகம்.

இஃது

கோம்பைநகரம்

கனம் கன்னப்பகவுண்டரவர்கள் குமாரர்

சித்திரகவி வித்துவான்

கனம்

117/4.11

## திருமலைச்சக்கய கவுண்டரவர்கள்

இயற்றியது.

சிவகிரி சமஸ்தானம்

மஹாவித்வான் கனம்

ச. திருமலைவேலுக் கவிராயரவர்களாற்

பார்வையிடப்பெற்று

பல புண்யபுமான்களின் பொருளுதவியால்

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

உ

ஸ்ரீ கணேசாயநம:

# சித்திவிநாயகர் திருப்பதிகம்.

இஃது

கோம்பைநகரம்

கனம் கன்னப்பகவுண்டரவர்கள் குமாரர்

சித்திரக்கவி வித்துவான்

கனம்

## திருமலைச்சக்கைய கவுண்டரவர்கள்

இயற்றியது.

---

சிவகிரி சமஸ்தானம்

மஹாவித்வான் கனம்

ச. திருமலைவேலுக் கவிராயரவர்களாற்

பார்வையிடப்பெற்று

பல புண்யபுமான்களின் பொருளுதவியால்

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

---

1911.

# சாற்றுக்கவிகள்.

இஃது மதுரை திருஞானஸம்பந்த ஸ்வாமிகள் மடம் ஆதீன
வித்வான் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியபிள்ளையவர்கள் மாணாக்கரும்
சின்னமனூர் மாணிக்கவாசக ஸ்வாமிகள் ஆலய தர்ம
கர்த்தாவும் சிவாநுபூதிவாய்ந்தவருமாகிய

ஸ்ரீமத் கனம்

## கு. அண்ணாமலைப்பிள்ளையவர்களியற்றியது.

மதிமிலைச்சியபுரிசடைப்பரமனைமனத்துட்
பதியுமன்பினிற்சித்திரகவிமுதற்பகரு
மதிகவுத்திமான்திருமலைச்சக்கயவறிவன்
றுதிவிநாயகர்பதிகம்போலேவர்சொல்குவரே.

இஃது சிவகிரிசமஸ்தானம் வித்வான் ஸ்ரீமத் கனம்

## ச. திருமலைவேலுக்கவிராயரவர்களியற்றியது.

கருணைநிறைதருமதியான்கற்றுணர்ந்தோர்தமைமதிப்பான்
வருபுகழ்க்கோம்பைப்பதியான்மனத்தையரனிடப்பதிப்பான்
றிருமலைச்சக்கயபுனிதன்செப்பினனப்பதிவாழு
மருமையுறுஞ்சித்திவிநாயகன்மிசையோர்பதிகமரோ.

இஃது ஷை கனம் ச. திருமலைவேலுக்கவிராயரவர்கள் குமாரர்

ஸ்ரீமத் கனம்

## சங்குக்கவிராயரவர்களியற்றியது.

பொனகரத்தி னெழில்படைத்த கோம்பையிற் செங்கனகமழை
பொழியுங் கொண்ட

லனகரத்தி னன்வைசியர் குலதிலகன் சின்னையவே
ளமைத்த செம்பொற்

றினகரத்தி லுவந்துறைவோர் செகமனைத்தும் பணியுமிரு
செய்ய தாட்கோ

கனகரத்தி முகத்தரெனுஞ் சித்திவிநாயகர் மீது
கனிவாய் மன்னோ.

எந்தைதனக்கு பிரணையான் திருமலைச் சக்கயமேமேலா
னின்பக் கூரச்

சிந்தைமகிழ்ந் துரைத்ததிருப் பதிகமதைக் குறுமுனியஞ்
சிடவுஞ் சால

முந்தையியற் றமிழுணர்ந்த புலவரெலா மிகப்புகழ்ந்து
மொழிவா ரென்னில்

விந்தைகொளப் பதிகமதை யான்புகழ்வ தொருவியப்போ
விளம்புங் காலே.

இஃது மார்க்கயன்கோட்டை வித்வான் ஸ்ரீமத் கனம்

## M. P. பழநிச்சாமி ஆசாரியாரவர்களியற்றியது.

அப்பதிகந் தருஞ்சீதத் தவிர்மதிச்செஞ் சடைபுனைபு மானே யென்னச், செப்பதிகந் தழும்போற்ற வந்தசித்தி விநாயகதே சிகனு ருள்ள, மொப்பதிகந் தனிலிதெனத் திருமலைசக் கபப்புனித னுரைக் குஞ்சீர்சால், இப்பதிகந் தனையுணர்ந்தோ ரினிப்பதிகஞ் சுதையென மே வியம்பிடாரே.

இஃது ஷை யூர் மகா-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணிய ஆசாரியாரவர்கள்
குமாரரும் வித்வான் கனம் M. P. பழநிச்சாமி ஆசாரியாரவர்
களின் மாணாக்கருமாகிய

## ஸ்ரீமத். கனம் S. சுந்தரமாசாரியாரவர்களியற்றியது.

மருக்குடைமென் மலர்ப்போதம்பர் மருக்குநெருங்கிய கோம்பைமாநகர்க்க, ணிருக்குமுயர் சித்திவிநா யகவிறைவ னிதயமகிழ்ந்தினிதினேற்பத், தருக்குநிகர் திருமலைச்சக் கயக்கவிஞ னுரைபதிகந்தனைக்கற்போர்யா,வருக்குநலம் பெருக்குமுள முருக்குமெனி விருக்குமெழில் வழுத்தற் பாற்றே.

இஃது ஸ்ரீமத். கனம் வேதாந்த விசாரணை

## உ. ம. சே. தபக்கல் சாயபு ராவுத்தரவர்களியற்றியது.

பத்தியுடன் பணிபுரிவோர்க் கெண்ணருநற்பலனளிக்கும்பர மனீன்ற, சித்திவிநாயகக்கடவுளினிதுவக்கப்பதிகமொன்று சிறப்பிற் சொற்றான், நத்தியசித்திரகவிசொல் திருமலைச்சக்கயனுணர்ந்தோர் ஞானம் சித்தி, முத்திசாதனமெய்தியுய்ந்திட நன்னூலிவன்போல் மொழிவோர்யாரே.

இஃது அம்மாபட்டி மகா-ள-ள-ஸ்ரீ **S. S.** சுருளியாண்டிக் கவுண்டர் அவர்கள் குமாரர்

## கனம் வடிவேலுக்கவுண்டரவர்களியற்றியது.

சுரும்புமுரல் பூம்பொதும்பர் மலிகோம்பை
நகரில்வைகித் துணைத்தா ளென்றும்
விரும்புமன்பர்க் குளமுவந்து வேட்பனவெல் லாமருளி
விமல ஞான
மருப்புசித்தி விநாயகர்மேல் திருமலைச்சக் கயன்பதிக
மன்பாற் சொற்றான
வருப்புலவர் துதிக்கவரு ளுதிக்கவிசை கதிக்கநில்
மதிக்க மன்னே.

உ

ஸ்ரீகணேசாயநம:



# சித்திவிநாயகர் திருப்பதிகம்.

## காப்பு.

அன்பதிக மொன்றுசித்தி யானைமுகா வுள்ளன்பால்
நின்பதிக மொன்று நிகழ்த்துகின்றே—னின்பருளி
யென்னூற்கு முன்னு யிருக்குநீ நின்னூலா
மிந்நூற்கு முன்னுயிரு,

## நூல்.

தூயகஜ வதனநம லம்போத ராயநம
சுக்கிலாம் பரதரநம
சூர்ப்பகர் ணயநம வக்ரதுண் டாயநம
சுமுகசுர சேவிதநம
சேயவே ரம்பநம பாலசந் த்ரதரநம
திவ்யதிரி லோசனநம
தேவகண பதிநம பராசத்தி தனயநம
திரிலோக: பூஜிதநம

மேயமறை முதல்வநம திணரக்ஷண்ய நம
விக்கின விநாயகநம
விதரண சுபாவநம திருவருள் விலாசநம
விமலபரி பூரணநம
ஆயசிற் சொருபநம நிகிலபூ தாதிநம
அதுலசித்தி விநாயகா
அமலசுப சதுர்வேத விநுதபரி புரபாத
அநகசிவ கணநாதனே. (1)

செயல்மிஞ்சுவாளெயிறு தொறுநஞ்சுகா லுமிகு
சினவெங்கணூரவினைச்
சிகிதுன்றுதோகையொடு மிடைகின்றநீள்பசிய
சிறைகொண்டுசாடலெனவே
வியன்மஞ்சுதுயில்மாகம் வளர்கொந்துசெறிபாளை
விரிகந்திமிசைபாசடை
மிகுசந்தநெடுவாழை பலசென்றநணிசூழ
மிளிர்நந்தவனமோடுநற்
கயலங்கணூரமலை யிடமுறைந்தலவலாற்
கருதுமாதிரைவருதலாற்
காகுதியொடுபோதமருள் கடமைபெய்திடுதலாற்
காமதகனனைநிகர்த்தே
அயல்வந்துகோனேரி நதிமேவுகொம்பைநகர்
ஆதிசித்திவிநாயகா
அமலசுபசதுர்வேத விநுதபரிபுரபாத
அநகசிவகணநாதனே. (2)

நாகுலாந்தூயநீர் வாவியிடைவாழ்ந்திடினு
நாளநீள்செய்யகஞ்சம்
நகுகதிர்வராதலரு மோவெவர்களெதுதரினு
நனிமகிழுமோவெனெஞ்சம்
எகுமோவென்றுகுறை கருணையொருவடிவா
யிருக்குநின்கருணைபகொஞ்சம்

எய்துமேற்குறையெலாந் தீர்ந்துநலனெய்துமேவ
னினியுனதுகழல்கள்தஞ்சம்
வாகுசேர்பசுவனந் தெரியலாயுறைதலால்
வளமிக்கவயமதனையே
வழங்கலால்விண்டுவா யோங்குதிருமலைசூழ
மலிகோம்பைநகரில்வாழும்
ஆகுவாகனநிரத வில்வதளபூஜித
வநாதிசித்திவிநாயகா
அமலசுபசதுர்வேத விநுதபரிபுரபாத
அநகசிவகணநாதனே (3)

தவளநிலவியபனிசெய் சசியினெழில்விரவுவலை
தரளமெறிதிரைகொளுததித்
தரணிமிசைதனமும்விரி சலசமுகவனிதையர்கள்
தனமுநனிகருதியினிய
பவளவிதழமுதமொழி பரவைவிழிமருவுமுமை
பரமனருள்புதல்வநினது
பதுமபதநினைவொருவு பதிதனெனையினியுனது
பணிபுரியவடிமைகொளுவாய்
துவளிதயசலனமிகு சுரர்கள்முனமுறையிடவ
சுரருமவருடைமதகரி
துரகதமிரதமுதல தொகுபடையுமடியவயில்
தொடுமமரர்பதிதருசுதை
யவளினியகுறமகளோ டுமைகுமரகுருமுனவ
ஞனசித்திவிநாயகா
அமலசுபசதுர்வேத விநுதபரிபுரபாத
அநகசிவகணநாதனே (4)

பொதியமுந்திடவந்து மலர்மணங்கொடுவந்து
பொலியநெஞ்சகமுவந்து
புலவர்துடிகொடிதந்து வெனவுவமைபலதந்து
புகலிடையினரைவிதந்து

வதியும்வலைபுகவண்டு கலையின்மருளொடுவண்டு
        வளரமனமதுதுவண்டு
வாடினேன்கதிவிண்டு கேடுறுதருள்விண்டு
        மானுநற்றேருளவிண்டு
பதுமனுயர்சுரர்கள்பணி யரசுமுனிவரர்கள்பணி
        பரமவிடவரவப்பணி
பகவனருள்குமரமணி! லநுதினமுமிகவுமணி
        பரவுகழலிணைசிரமணி
அதிரசத்தேனனைய கவிஞர்சொற்பாமலரி
        னணிகொள்சித்திவிநாயகா
அமலசுபசதுர்வேத விநுதபரிபுரபாத
        அநகசிவகணநாதனே. (5)

தாமமார்பன்மலர்த் தாமமார்பன்மிகுந்
        தாமமார்பாரிலன்பர்
சம்புவேயமபடர்வ சம்புகாவடியர்நெஞ்
        சம்புரையதாய்வைகுவிற்
காமமர்த்தனகலங் காமனத்தவரைநீங்
        காமறைப்பொருளேயருட்
கந்தரசதாசிவவு கந்தரவணிந்தவசு
        கந்தரத்கருணைமீதேன்
றேமமுறவிடையரு தேத்திடுங்கயிலைவா
        ழீசன்சுயம்ப்ரகாசன்
எழின்மிகும்பதுமவடி யாங்கிழியையன்பரா
        மிரவலர்க்கருள்புரவலன்
ஆமதுரமொழியுமை வரன்புதல்வதஞ்சநீ
        யமிர்தசித்திவிநாயகா
அமலசுபசதுர்வேத விநுதபரிபுரபாத
        அநகசிவகணநாதனே. (6)

வேலைசெய்யாதவர்க் கெவர்கூலிதருவரவ்
        விதமெனதுவாழ்நாளெலாம்

வீணாகநன்மையிது தீமையிதெனத்தெரியும்
விவரநன்குணராமலே
சேலைநேர்விழிமினார் பாதமேகதியெனத்
தினமுமவரிடுவேலைகள்
செய்துமயலார்பொருளை வஞ்சித்துமற்பரைத்
தேடிமிகுநேசமுற்றுங்
காலையுயர்நிழல்போற் படிப்படியதாய்க்குறைவு
காணநல்லறிவுகுன்றிக்
கணமேனுநின்னடி துதித்திலேனெவ்வாறு
கடையனுய்வேனாயினும்
ஆலையுறுகன்னலென நைந்திடாதென்னையாண்
டருள்செய்சித்திவிநாயகா
அமலசுபசதுர்வேத விரதபரிபுரபாத
அநகசிவகணநாதனே. (7)

விளைவுறும்பயிருக் கிறைக்குநன்னீரதனை
விழலுக்கிறைத்தல்போல
மேதகுநினடிகள்மிசை பாடாதுலோபர்மேல்
வீண்கற்பனைகளமைத்து
வளைகொளுஞ்செங்கை நெடுமாலினிற்காத்திடுவை
மழைபினிற்பொன்சொரிகுவை
வளர்பொதியமுனிவரனு நாணத்தமிழ்க்கடலை
வாரியுண்பாயென்றுநற்
றளைகொள்பலகவிசொலியு நீசொலுந்தன்மையோ
சற்றுமிலைபாடியதுநின்.
றன்னறிவிலாமையே யாகுமேகென்றவர்கள்
சாற்றமீண்டுனையடைந்தேன்
அளையுண்மாண்மருகவென் பிழைகள்மன்னித்தென்னை
யாட்கொள்சித்திவிநாயகா
அமலசுபசதுர்வேத விரதபரிபுரபாத
அநகசிவகணநாதனே. (8)

இன்பமுஞ்சிறிதுநாட் டுன்பமுஞ்சிறிதுநா
ளென்னுமிவ்வவனியந்தோ
வெனதுவாழ்நாளெலாந் துன்பமேயல்லாம
லின்பமோர்சிறிதுமறியேன்
வன்புசெய்கொடுந்துயர்க் கென்மனங்காணியாய்
வாழுமிடமோவல்லது
வருபிறப்பிடமோ சிரஞ்சீவியாயென்றும்
வாழநல்வரம்பெற்றதோ
வென்புகல்வதென்கொடுமை யானுமிரவினை
யெதிர்க்கின்றவிருளுமுளதோ
வினியேனுநின்னருட் கடைவிழியினோக்கியே
யிடரெலாமாற்றியெனையா
ளன்பருக்கெளியனே வன்பருக்கரியனே
யானசித்திவிநாயகா
அமலசுபசதுர்வேத விநுதபரிபுரபாத
அநகசிவகணநாதனே. (9)

எண்ணரியவாஞ்சீவ பேதகோடியிலரிய
வியல்சேர்மநுப்பிறப்பை
யேழையேற்கீந்தனையினிச்சென்மசாபல்ய
மெய்தநல்லருள்சுரந்து
மண்ணதனிலுனதடியி லுள்ளன்புநீங்காது
வழிபாடுநனிசெய்யவும்
வாஞ்சையொடுநின்னருட் பாமாலைபாடிநின்
மலரடிதனிற்சூட்டவும்
தண்ணளிமிகுத்திடப் புன்றொழிலகற்றியே
சன்மார்க்கநெறிசெல்லவும்
தமியேன்மனத்தைத் திருத்தியாட்கொள்ளில்நீ
தந்தவிச்சென்மநன்றும்
அண்ணலேபரமநித் யானந்தசிற்சொருப
ஞானசித்திவிநாயகா
அமலசுபசதுர்வேத விநுதபரிபுரபாத
அநகசிவகணநாதனே. (10)

வளமிகுங்சோம்பை நகரிற்பரம்பரையதாய்
வாழும்வைசியமரபினான்
வளர்தருமமேயென்று மழிவிலாப்பொருளென
மதித்தறம்பலவுநாளு
முளமுவந்தேசெய்யுஞ் சின்னையகுணாகர
னுகந்துசெய்பெருங்கோயிலை
யுறையுளாக்கொண்டுகலி புகவரதராகநல
முதவியன்னோன்பின்வருந
தளவநகைமாமேவு செல்வருள்ளன்பாற்
சதாகாலமும்பக்தியாய்த்
தாஞ்செயும்பூசனையருச்சனை நிவேதனந்
தழையுமன்பாலேற்பவா
அளவிலிருமைக்குரிய நல்வாழ்வுபேரின்ப
மன்னவர்க்கருளியிந்நா
ளரங்கேற்றியச்சிடும் புனிதர்க்குநலமிக
வளித்தருள்செய்விக்னேசனே. (11)

சித்திவிநாயகர் திருப்பதிகம்.

சம்பூரணம்.

## இந்நூலையச்சிடுதற்குப்பொருளுதவிசெய்த கனவான்களின் பெயர்வழி ஜாப்தா

| | |
|---|---|
| ஸ்ரீமத் கனம் ப்ரம்மஸ்ரீ. ஆ. கிராமமுன்சீப் V. பத்மநாபையரவர்கள் | 1—0— |
| கலம்புத்தூர் அக்கிரகாரம் பாத்திரவியாபாரம் கனம் கு. ப. கந்தசாமி முதலியாரவர்கள். | 2—0— |
| சித்திவிநாயகர்கோவில் தர்மகர்த்தா ஆ. மீனாக்ஷிசுந்தரம் செட்டியாரவர்கள் | 4—0— |
| வே. அருணாசலம் செட்டியாரவர்கள் | 1—8— |
| P. திருமலைசுப்புசெட்டியாரவர்கள் | 1—8— |
| திண்டுக்கல் டவுண் நாகல்நாயக்கன்பட்டி ஆ. சி. சுப்பயபிள்ளையவர்கள் | 2—0—0 |
| சொ. சின்னப்பன்செட்டியாரவர்கள் | 1—0—0 |
| ஆ. கலுவன்செட்டியாரவர்கள் | 1—0—0 |
| சொ. வெள்ளையம்மாளவர்கள் | 1—0—0 |
| R. பெருமாள்கவுண்டரவர்கள் | 1—0—0 |
| ந. லட்சுமயன்செட்டியாரவர்கள் | 1—[illegible]—0 |
| மு. அ. சுப்பயன்செட்டியாரவர்கள் | 1—0—0 |
| திண்டுக்கல் டவுண் நாகல்நாயக்கன்பட்டி ஆ. சி. பழனிவேலாயுதம் பிள்ளையவர்கள் | 0—8—0 |
| ல் லவராயன்பட்டி மா. கி. மு. சீனிசங்கிலிசெட்டியார் அவர்கள் | 1—0—0 |
| பெ. சுப்பயன்செட்டியாரவர்கள் | 0—4—0 |
| ராமல்லிங்கஸாமிசெட்டியாரவர்கள் | 1—0—0 |
| சொ. சு. ராமசாமிசெட்டியாரவர்கள் | 0—8—0 |
| L. நாராயணசாமியாசாரியவர்கள் | 1—0—0 |
| தா. முத்துச்சாமிபிள்ளையவர்கள் | 1—0—0 |
| மா. மாரிச்சாமிபிள்ளையவர்கள் | 1—0—0 |
| ட. திருமலைசாமிபிள்ளையவர்கள் | 1—0—0 |
| கு. மு. முத்திருளப்பபிள்ளையவர்கள் | 1—0—0 |
| வீ. கருப்பணபிள்ளையவர்கள் | 1—0—0 |
| சொ ராமசாமிசெட்டியாரவர்கள் | 0—8—0 |
| பி. கணபதிசெட்டியாரவர்கள் | 1—0—0 |
| சு. நல்லதம்பிசெட்டியாரவர்கள் | 1—0—0 |
| கு. பண்டாரம்செட்டியாரவர்கள் | 0—4—0 |
| பெ. மூ. சுப்பராஜா அவர்கள் இராஜபாளையம் | 1—0—0 |
| மாயத்தேவர் அவர்கள் | 1—0—0 |